**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 155/2025 D.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சுப்பிரமணியன் | க–பெ/ த–பெ | ரெத்தினம் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம் | |
| வயது: | : | 51/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | டிரைவர் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.08.2026**

-----------------------------------------------------------------------------------------------------

<u>12.08.2026</u>

<u>குறுக்கு விசாரணை</u>

1) எதிரி அழகம்மை யாரிடம் இருந்து கடன் பெற்றுள்ளார் மற்றும் எவரிடம் திருப்பி செலுத்தியுள்ளார் என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். 26.12.2024 ல் நான் மற்றும் எதிரி, எதிரியின் வீட்டில் இருந்தோம் என்றால் எதிரியின் தாய் மற்றும் தந்தை இருந்தார்கள். காசோலை மற்றும் புரோநோட் கொடுத்த விபரம் எதிரி மற்றும் எனக்கு மட்டும்தான் தெரியுமா என்றால் எதிரியின் பெற்றோர்களுக்கும் தெரியும். காசோலை எண் தெரியுமா என்றால் தெரியாது. மறுநாள் புகார்தாரர் பணம் தரவில்லை என்பதற்கு எதிரி புகார்தாரர் மீது ஏதாவது சட்ட நடவடிக்கை எடுத்தாரா என்றால் இல்லை. புரோநோட்டில் நான் சாட்சிகையொப்பம் செய்யவில்லையா என்றால் செய்யவில்லை. முதல் விசாணையில் சொன்னவாறு 26.12.2024 அன்று புகார்தாரர் எதிரியின் வீட்டிற்கு செல்லவில்லை என்றாலும், அன்று வழக்கு காசோலை மற்றும் ஆவணங்கள் எதிரி புகார்தாரருக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. உண்மையாக புரோநோட் கொடுக்கும்போது நான் இருந்திருத்தால் சாட்சி கையொப்பம் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எதிரி எனது சொந்த அக்கா மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முன்னிலையில் வழக்கு காசோலை மற்றும் புரோநோட் பூர்த்தி செய்யாமல் கையொப்பம்

மட்டும் செய்து கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, புரோநோட்டை நிரப்பி கையொப்பம் பெற்றார், காசோலை நிரப்பவில்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.08.12 17:20:03 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,காரைக்குடி.